# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முறையீட்டு மனு எண்: 0532/ஊராட்சி/2018

ஆணை எண்: 109/2018

நாள்: 27/04/2018

P. சவர்லெட்,
மாரியம்மன் கோவில் தெரு,
ஆதிவராகநத்தம்,
புவனகிரி, கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

## ஆணை:

கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியம், ஆதிவராக நத்தம், புவனகிரியில் வசிக்கும் திரு. P. சவர்லெட், தனது 20.4.2018 நாளிட்ட கடிதத்தில், கடலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொது தகவல் அலுவலரிடம் C.N. பாளையம் ஊராட்சியில் உள்ள பெருமாள் கோவில் தெரு, கதவு எண்.38/2, வரி விதிப்பு எண்.147 தொடர்பான "வீட்டு வரி கேட்பு பதிவேடு எடு குறிப்பு" நகல் கோரிவிண்ணப்பித்ததாகவும், ஆனால் கடலூர் ஊராட்சி ஒன்றிய பொது தகவல் அலுவலர், வழங்க காலதாமதம் செய்கின்றார் என்றும், பல நினைவூட்டுகள் அனுப்பியும், அவர் பதில் தரவில்லை எனத் தெரிவித்து, அவர் கோரியுள்ள தகவல்களை உடனடியாக வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2. உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திரு. P. சவர்லெட், அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவருக்காக**

செயலாளர்.

**பெறுநர்**

P. சவர்லெட்,
மாரியம்மன் கோவில் தெரு,
ஆதிவராகநத்தம்,
புவனகிரி அஞ்சல் – 608 601.

**நகல்**

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கடலூர் மாவட்டம், கடலூர், (இணைப்புகளுடன்)
2. நேர்முக உதவியாளர்
3. இருப்பு கோப்பு - 2